## கடற்கரை கவியரங்கு– 654

**நாள்: 05-10-2025**

# காலத்தின் சுவடுகள்!

நேற்றும் இன்றும் நாளையும்
நிகழ்ந்ததும் நிகழ்வதும்
நிகழப் போவதும் ஒரு தொடர்
நிலையான காலத்தின் சுவடுகள்!

சிரிப்பதும் அழுவதும்
சிந்தித்து மகிழ்வதும்,
ஒவ்வொரு நிலையிலும்
ஒவ்வொருவருக்கும்
தொடர்கதை ஆகும்!

வானவில் காட்டும்
வண்ணக் கோலம்
கலைந்து போனபின்,
காட்சிதான் நிறையுமோ?

இருந்தவர் இருப்பவர்
இல்லாதவர் ஆகிய பின்,
மண்ணில் ஏதும்
சுவடுகள் உண்டோ?

அல்லன நீக்கி நல்லன
செய்து, எல்லா உயிர்களும்
இறைவழி என்று
ஏற்று வாழ்ந்திடில்,
வையம் பல நாள்
வாழ்த்தி நிறையும்!

என்றும் மகிழ்ந்து,
இனிய தாய் வாழ்வோம்!

**கவிஞர் கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன்.** 05-10-2025